www.Padasalai.Net www.Trb Tnpsc.com

TSM

9 - ஆம் வகுப்பு

நேரம் : 3.00 மணி

# முழு ஆண்டுப் பொதுத்தேர்வு – 2024

## தமிழ்

மதிப்பெண்கள் :100

பகுதி – I சரியான விடையைத் தேர்வு செய்க. 15 X 1= 15

1. தமிழ் மொழியில் கிடைக்கப்பெற்ற முதல் இலக்கண நூல்
அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) அகத்தியம் ஈ) புறநானூறு
2. மரவேர் ........... புணர்ச்சி. அ) இயல்பு ஆ) திரிதல் இ) தோன்றல் ஈ) கெடுதல்
3. தென்னிந்தியாவின் அடையாளச் சின்னமாக காங்கேயம் மாடுகள் போற்றப்படுகின்றன. - இது எவ்வகைத் தொடர்? அ) உணர்ச்சித் தொடர் ஆ) செய்தித் தொடர் இ) தனிவாக்கியம் ஈ) கட்டளைத் தொடர்
4. தமிழ் விடு தூது ................. என்னும் இலக்கிய வகையைச் சார்ந்தது.
அ) தொடர்நிலைச் செய்யுள் ஆ) புதுக்கவிதை இ) சிற்றிலக்கியம் ஈ) தனிப்பாடல்
5. ஐம்பெருங்குழு, எண்பேராயம் - சொற்றொடர்கள் உணர்த்தும் இலக்கணம்
அ) திசைச் சொற்கள் ஆ) வட சொற்கள் இ) உரிச்சொற்கள் ஈ) தொகைச் சொற்கள்
6. உலகத் தாய்மொழி நாள் கொண்டாடப்படுவது
அ) சனவரி 21 ஆ) பிப்ரவரி 21 இ) மார்ச் 21 ஈ) ஏப்ரல் 21
7. இந்திரவிழா ................ நகரில் நடைபெற்றது. அ) தொண்டி ஆ) முசிறி இ) புகார் ஈ) மதுரை
8. "யாதும் ஊரே யாவரும் கேளிர்" - என்று கூறியவர் ........... .
அ) கபிலர் ஆ) கண்ணதாசன் இ) கணியன் பூங்குன்றனார் ஈ) காரியாசான்
9. தமிழ்நாடு அரசு சிற்பக் கல்லூரி அமைந்துள்ள நகரம் ........... .
அ) மாமல்லபுரம் ஆ) காயல்பட்டினம் இ) பூம்புகார் ஈ) தஞ்சாவூர்
10. இந்திய இராணுவப்படை ..................... என்பவரின் தலைமையில் உருவாக்கப்பட்டது.
அ) திலகர் ஆ) கோகலே இ) நேதாஜி ஈ) மோகன் சிங்
11. தமிழ் கவிஞருள் அரசர் என திருத்தக்க தேவரைப் புகழ்ந்தவர் .................. .
அ) ஜி.யு. போப் ஆ) வீரமாமுனிவர் இ) கிருஷ்ணப்பிள்ளை ஈ) பரஞ்சோதி முனிவர்
12. ................. மொழிக்குப் பின் வல்லினம் மிகும்.
அ) ஒரெழுத்து ஆ) ஈரெழுத்து இ) மூவெழுத்து ஈ) நாலெழுத்து
13. பொருந்தாத ஒன்றைத் தேர்க. அ) நன்னூல் ஆ) தொல்காப்பியம் இ) அகத்தியம் ஈ) திருக்குறள்
14. உற்றறிவு என்பது எது? அ) நுகர்தல் ஆ) தொடு உணர்வு இ) கேட்டல் ஈ) காணல்
15. திராவிட மொழிகளின் ஒப்பிலக்கணம் என்னும் நூல் எழுதப்பட்ட ஆண்டு .................. .
அ) 1746 ஆ) 1856 இ) 1996 ஈ) 1836

பகுதி - II பிரிவு - அ 4 X 2 = 8

எவையேனும் நான்கனுக்கு மட்டும் விடையளி. வினா எண். 17 க்கு கட்டாயம் பதிலளிக்கவும்.

16. விடைக்கேற்ற வினாக்களை அமைக்க. அ) சோழநாட்டில் யானைப்படை வலிமையானது.
ஆ) விருத்தப்பாக்களால் இயற்றப்பட்ட முதல் காப்பியம் சீவக சிந்தாமணி ஆகும்.
17. தரும் - என முடியும் குறட்பாவை எழுதுக.
18. கண்ணி என்பதன் விளக்கம் யாது?
19. நிலம்போல யாரிடம் பொறுமை காக்க வேண்டும்?
20. கண்ணன் புகுந்த பந்தல் எவ்வாறு இருந்தது?
21. சாரதா சட்டம் எதற்காக இயற்றப்பட்டது?

பிரிவு - ஆ எவையேனும் ஐந்தனுக்கு மட்டும் விடையளி. 5 X 2 = 10

22. வீணையோடு வந்தாள். கிளியே பேசு - தொடரின் வகையைச் சுட்டுக.
23. கலைச்சொற்கள் தருக. அ) Excavation ஆ) Hero stone.
24. பகுபத உறுப்பிலக்கணம் தருக. வந்தான்.
25. தமிழ் எண்களால் எழுதுக. அ) 32 ஆ) 61
26. மரபு இணைச் சொற்களை தொடரில் அமைத்து எழுதுக.
அ) வானும் மண்ணும் ஆ) சீரும் சிறப்பும்
27. காலந்தோறும் தமிழ் தன்னை எவ்வாறு புதுப்பித்துக்கொள்கிறது?
28. பிழைநீக்கி எழுதுக. அ) பவளவிழிதான் பரிசு உரியவள். ஆ) குழலியும் பாடத் தெரியும்.

பகுதி - III பிரிவு - அ 2 X 3 = 6

எவையேனும் இரண்டிற்கு மட்டும் விடையளி.

29. உரை பத்தியைப் படித்து வினாக்களுக்கு விடை தருக.
அப்துல்கலாம் இந்தியாவின் 11-வது குடியரசுத் தலைவராகப் பணியாற்றிய இந்திய அறிவியலாளர். தமிழ்நாட்டின் இராமேசுவரத்தைச் சார்ந்தவர். ஏவுகணை ஊர்தி தொழில்நுட்ப வளர்ச்சியில் கலாம் காட்சிய ஈடுபாட்டினால் இவர் "இந்திய ஏவுகணை நாயகன்" என்று போற்றப்படுகின்றார். இந்தியாவின் உயரிய விருதான பாரத இரத்னா விருது பெற்றவர்.
1) அப்துல்கலாம் எந்த ஊரைச் சேர்ந்தவர்?



Scanned with CamScanner

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com

2) இந்திய ஏவுகணை நாயகன் என்று போற்றப்படுவது ஏன்?
3) அப்துல்கலாம் பெற்ற உயரிய விருது யாது?

30. நிலைத்த புகழைப் பெறுவதற்கு குடபுலவியனார் கூறும் வழிகள் யாவை?
31. மருத்துவர் முத்துலட்சுமியின் சாதனைகளை எழுதுக.

**பிரிவு - ஆ எவையேனும் இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளி.** 2 X 3 = 6
**வினா எண்.34 க்கு கட்டாயமாக பதிலளிக்கவும்.**

32. பின்வரும் பாடலைப் படித்து கீழுள்ள வினாக்களுக்கு விடையளி.

*பூவாது காய்க்கும் மரமுஉள; நன்று அறிவார்,*
*மூவாது மூத்தவர். நூல் வல்லார்; தாவா*
*விதையாமை நாறுவ வித்து உள; மேதைக்கு*
*உரையாமை செல்லும் உணர்வு.*

1) இப்பாடல் இடம்பெறும் நூல்
அ) ஏலாதி ஆ) திரிகடுகம் இ) சிறுபஞ்சமூலம் ஈ) ஐந்திணை ஐம்பது
2) விதையமை - சொல்லின் இலக்கணக் குறிப்பு
அ) தொழிற்பெயர் ஆ) எதிர்மறை தொழிற்பெயர் இ) வினையெச்சம் ஈ) பெயரெச்சம்
3) இப்பாடலின் ஆசிரியர் யார்?
அ) கணிமேதாவியார் ஆ) நல்லாதனார் இ) காரியாசான் ஈ) மாறன் பொறையனார்

33. ஆண்டாள் கண்ட கனவு யாது?
34. அடிமாறாமல் எழுதுக. "காடெல்லாம்" - எனத்தொடங்கும் பெரியபுராணப் பாடலை எழுதுக.
*(அல்லது)* "ஒன்றறிவதுவே" - எனத் தொடங்கும் பாடலை எழுதுக.

**பகுதி - இ இரண்டு வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும்.** 2 X 3 = 6

35. பொருள் எழுதி தொடரமைக்க. அ) பரி, பறி ஆ) வாலை, வாளை இ) கரை, கறை
36. உவமையணியை சான்றுடன் விளக்குக.
37. தன்குற்றம் நீக்கிப் பிறர்குற்றம் காண்கிற்பின்
என்குற்றம் ஆகும் இறைக்கு - குறட்பாவினை அலகிட்டு வாய்பாடு தருக.

**பகுதி - IV அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 5 X 5 = 25

38. தூது அனுப்ப தமிழே சிறந்தது என்பதற்கு தமிழ்விடு தூது காட்டும் காரணங்களை விளக்கி எழுதுக.
*(அல்லது)* ஏறுதழுவுதல் பற்றி இலக்கியங்கள் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
39. தேசிய அளவிலான கபாடி போட்டியில் கலந்துகொண்டு வெற்றி பெற்ற உன் நண்பனைப் பாராட்டிக் கடிதம் ஒன்று வரைக. *(அல்லது)*
வருமானச் சான்று வேண்டி வட்டாட்சியருக்கு விண்ணப்பம் ஒன்று வரைக.
40. **நயம் பாராட்டி எழுதுக.**

*கிளிக்கு றெக்கை இருக்கும் வரைக்கும்*
*கிழக்கு வானம் தூரமில்லை*
*முளைக்கும் விதைகள் முளைக்கத் துடித்தால்*
*பூமி ஒன்றும் பாரமில்லை*
*பாய்ந்து பரவும் இளைய நதிகளே*
*பள்ளம் நிரப்ப வாருங்கள்*
*சாய்ந்து கிடக்கும் கழனிகள் எங்கும்*
*கதிர்வேல் சுமந்து தாருங்கள்* - ***வைரமுத்து***

*(அல்லது)* யாப்பின் உறுப்புகள் எத்தனை?
அவைகளை ஒவ்வொன்றையும் சான்றுடன் விளக்குக.

41. காட்சியைக் கண்டு கவினுற எழுதுக.



42. **பொருத்தமான பெயரடை அல்லது வினையடையைத் தேர்ந்தெடுத்து எழுதுக.**
(அழகாக, கொடிய, இனிய, நல்ல, மெதுவாக)
1) எல்லோருக்கும் ............... வணக்கம். 2) .......... விலங்கிடம் பழகாதே.
3) அவன் .................. நண்பனாக இருக்கிறான். 4) ஊர்தி ............... சென்றது.
5) சங்க இலக்கியம் வாழ்க்கையை ................. காட்டுகிறது.

**பகுதி - V அனைத்து வினாக்களுக்கும் விடையளி.** 3 X 8 = 24

43. இயந்திரங்களும் இணையவழி பயன்பாடு பற்றிய செய்திகளைத் தொகுத்து எழுதுக. *(அல்லது)*
மொழியிலும், இலக்கியத்திலும் பெரியார் மேற்கொண்ட சீரமைப்புகளை விளக்குக.
44. மகனுக்கு எழுதிய கடிதம் மூலம் நா.முத்துகுமார் கூறும் செய்திகளைத் தொகுத்து எழுதுக.
*(அல்லது)* இந்திய விண்வெளித்துறை குறித்து எழுதுக.
45. குறிப்புகளைக் கொண்டு கட்டுரை வரைக. முன்னுரை - நோய்வரக் காரணம் - நோய்தடுப்பு முறைகள் - வருமுன் காப்போம் - மாசுபாட்டு காரணங்கள் - விழிப்புணர்வு - முடிவுரை.
*(அல்லது)* "எனது பயணம்" என்னும் தலைப்பில் நீங்கள் சென்று வந்த சுற்றுலாப் பற்றிய அனுபவங்களை வர்ணித்து எழுதுக.



Scanned with CamScanner

www.Padasalai.Net

kindly send me your key Answers to our email id - padasalai.net@gmail.com